**<u>STARTING TIME 12.15 P.M</u>**

**<u>IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.</u>**

**<u>O.S. No. 11/2025</u>**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff solemnly affirmed by Tr. R. Suresh Babu, Grade-III Bench Clerk of this court, on 19.08.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **கிருஷ்ணா ரெட்டி** Father's Name : Narayanasamy Reddy

Address : 36, Vinayagar Koil Street, Panavattampadi Village,
Nemili Taluk, Ranipet Distrit.

Age :73

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

11. என்னை ஏற்கனவே குறுக்கு விசாரணை செய்த போது வா.சா.ஆ.1 கிரையப் பத்திரத்தில் முருகேச ரெட்டி என்பவர் சாட்சி கையெழுத்து செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். மேற்படி முருகேச ரெட்டி தான் சாட்சி கையெழுத்து செய்தார் என்பதை நிரூபிக்க நான் தயாராக உள்ளேனா என்றால், நிருபிப்பேன். வா.சா.ஆ.1 கிரையப் பத்திரத்தில் முருகேச ரெட்டி சாட்சியாக கையெழுத்து செய்யவில்லை என்றால், சரியல்ல.

12. தாவா சர்வே எண்ணில் எனது தகப்பனார் கிரையம் பெற்றததாக நான் சொல்லும் 35 செண்டிற்கு வடக்கில் யார் சொத்து உள்ளது என்றால், முருகேச ரெட்டி வகையறா சொத்து உள்ளது. நான் சொல்வது தவறு என்றும், நான் சொல்லும் 35 செண்ட் சொத்திற்கு வடக்கில் உள்ள சொத்து 1, 2 பிரதிவாதிகள்

குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால், சரியல்ல.

13. அசல் வழக்கு எண் 122/2020 என்ற வழக்கில், 1, 2 பிரதிவாதிகளின் தந்தை கிரையம் பெற்றுள்ள சொத்திற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், அது பொய் பத்திரமாகும். அந்த பத்திரத்தில் 28–1/2 செண்ட் ஒரு சக்குபந்தியாகவும், 21 செண்ட் ஒரு சக்குபந்தியாகவும் காட்டப்பட்டுள்ளது என்றால், அது பொய்யாகும். அந்த கிரையப் பத்திரத்தில் உள்ள 28–1/2 செண்ட் சொத்தின் சரியான சர்வே எண் 502 என்றும், பத்திரத்தில் 501/14 என தவறாக குறிப்பிடப்பட்டதன் அடிப்படையில் அந்த பத்திரம் பொய் பத்திரம் என தவறாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

14. 1, 2 பிரதிவாதிகளின் தந்தை கிரையம் பெற்றுள்ள சொத்திற்கான ஆவணத்தில் உள்ள சொத்திற்கான சக்குபந்தியை நான் தெரிந்துக் கொண்டேனா என்றால், அது பற்றி நினைவில் இல்லை. 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் சரியான சக்குபந்தியை குறிப்பிட்டு தான் சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார் என்றும், அதை நான் ஒப்புக் கொண்டால் எனது வழக்கிற்கு பாதகமாகிவிடும் என்பதால் தற்போது அந்த ஆவணம் பொய்யான ஆவணம் என்று சொல்கிறேன் என்றால், சரியல்ல.

15. எனக்கு சோளிங்கர் நீதிமன்றத்தில் வேறு வழக்குகள் உள்ளதா என்றால், உள்ளது. நான் அந்த வழக்கிலும் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சரிதான். எனவே, எனக்கு அனைத்து விவரங்களும் தெரியும் என்றும், தற்போது வழக்கிற்காக வேண்டி நினைவில் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

16. வா.சா.ஆ.1 கிரையத்திற்கு பின்னிட்டு எனது தகப்பனார் பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் பெற்றுள்ளேனா என்றால், இல்லை, ஆனால் என் பெயரில் உள்ளது. பட்டா என் பெயரில் எந்த வருடம் வழங்கப்பட்டது என்றால்,

நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது.

17. அ–பதிவேட்டில் சர்வே எண் 502/1–ல் உள்ள எக்டேர் 0.11.5 விஸ்தீரண சொத்து கணேசன் பெயரிலும், 502/2–ல் உள்ள எக்டேர் 0.08.0 விஸ்தீரண சொத்து என் பெயரிலும் பதிவாகியுள்ளது என்றால், சரியல்ல, அது தவறாகும், அது போல் தவறாக பதிவாகியுள்ளது. மேற்படி தவறாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் எப்போது தெரிய வந்தது என்றால், 2019–ம் ஆண்டு 1, 2 பிரதிவாதிகளுக்கிடையே செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொண்ட பிறகு தெரிந்தது.

18. எனது பிரமாண வாக்குமூலத்திலும், வழக்குரையிலும் தாவா சொத்தை 1983–ம் ஆண்டு அடமானம் வைத்ததாக சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். அந்த அடமான பத்திரத்தில் எனக்கு பாத்தியப்பட்டதாக சொல்லும் 35 செண்ட் சொத்தும் அடங்கியுள்ளதா என்றால், ஆமாம். பட்டாவை வைத்து தான் அந்த அடமான கடன் வாங்கினேன் என்றால், பட்டா, சிட்டா, அடங்கல் வைத்து வாங்கினேன். அந்த அடமானப் பத்திரத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அந்த ஆவணத்தின் நகலை நான் வாங்கி தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால், தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன்.

19. எனக்கு சொந்தமான 20 செண்டிற்கு பதிலாக, ஆவணம் ஏற்படுத்த வேண்டியே 35 செண்ட் சொத்தை பொறுத்து அடமானப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல. என் பெயரில் இருந்த பட்டாவிற்கு மாறாக ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளதால் அந்த ஆவணம் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல.

20. சர்வே எண் 502–ல் உள்ள 48 செண்ட் சொத்து எத்தனை தலையாக உள்ளது என்றால், 35 செண்ட் ஒரு தலையாகவும், 13 செண்ட் ஒரு

தலையாகவும் உள்ளது. அது போல் 35 செண்ட் ஒரு தலையாகவும், 13 செண்ட் ஒரு தலையாகவும் உள்ளது என்பதை வழக்கறிஞர் ஆணையர் மூலம் நிரூபிக்க தயாராக உள்ளேனா என்றால், அதற்கு அவசியம் இல்லை.

21. சர்வே எண் 502–ல் நான் சொல்வது போல் 35 செண்ட் மற்றும் 13 செண்ட் என இரண்டு தலையாக உள்ளது என்பதற்கு ஆதாரமாக வருவாய் துறை ஆவணங்கள் உள்ளதா என்றால், அது பற்றி தெரியாது. நான் சொல்வது போல் சர்வே எண் 502–ல் 35 செண்ட் மற்றும் 13 செண்ட் என இரண்டு தலையாக இல்லை என்றும் 20 செண்ட் ஒரு தலையாகவும் 28–1/2 செண்ட் ஒரு தலையாகவும் தான் உள்ளது என்றால், சரியல்ல.

22. பட்டாவில் உள்ள கணேசன் என்பவர் முருகேசன் என்பவரின் மகன் என்றால், சரிதான். முருகேசன் என்பவருக்கு, ஜெயராமன், பலராமன், சுப்பிரமணி என்ற மற்ற 3 மகன்களும் உள்ளார்கள் என்றால், சரிதான். சுப்பிரமணியின் மகன்கள் பெயர் கோதண்டன் மற்றும் பாபு என்றால், சரிதான். மேற்படி நபர்கள் தான் 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு கிரையப் பத்திரம் எழுதி பதிவு செய்துக் கொடுத்துள்ளார்கள் என்றால், அது பொய் பத்திரம் ஆகும்.

23. தற்போது பிரச்சனை உள்ள சொத்தில் என்ன பயிர் உள்ளது என்றால், பூ செடி உள்ளது. அதற்கு நீர் ஆதாரம் எங்கிருந்து வருகிறது என்றால், தப்பூர் எல்லையில் உள்ள சர்வே எண் 258 நிலத்தில் உள்ள கிணற்றில் இருந்து தண்ணீர் வருகிறது. கிணற்று நீர் கால்வாய் மூலமாக வருகிறதா அல்லது பைப் மூலம் வருகிறது என்றால், பைப் மூலமாக வருகிறது. சர்வே எண் 258–ல் உள்ள கிணறு யார், யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், எனக்கும், கோதண்டன் என்பவருக்கும் பாத்தியப்பட்டது ஆகும். மேற்படி கிணற்றில் இருந்து பிரச்சனை உள்ள சொத்திற்கு தண்ணீர் பாய்கிறது என்பதை நான் நிரூபிக்க தயாராக உள்ளேனா என்றால், தயார் தான்.

24. பிரச்சனைக்குள்ள சொத்தில் உள்ள கால்வாயில் பைப் லைன் உள்ளதாக சொல்கிறேனா என்றால், ஆமாம். பைப் லைன் சுமார் 1200 மீட்டரில் இருக்குமா என்றால், அவ்வளவு இல்லை, சுமார் 320 மீட்டர் நீளம் இருக்கும். எத்தனை வருடத்திற்கு முன்பு பைப் லைன் அமைத்ததாக சொல்கிறேன் என்றால், 30 வருடத்திற்கு முன்பு அமைத்தேன். லைப் லைன் அமைக்கும் வேலையை கூலி ஆட்கள் வைத்து செய்தேனா அல்லது நானே செய்தேனா என்றால், நானும், என் மனைவியும் தான் செய்தோம்.

25. அந்த பைப் லைன் யார், யார் நிலங்களுக்கு அடியில் வருகிறது என்றால், எனது சொத்து மற்றும் முருகேசன் என்பவரது சொத்துக்களுக்கு அடியில் வருகிறது. நான் சொல்வது பொய் என்றும், நான் சொல்லும் பைப் லைனானது பிரதிவாதிகளின் பூர்வீக நிலம், ராமன் நிலம், ருக்மாங்கதன், ஜெயராமன் மற்றும் அம்பலவானன் ஆகியோர்களது நிலங்களுக்கு அடியில் வருகிறது என்றால், சரியல்ல.

26. சர்வே எண் 258-ல் உள்ளதாக சொல்லும் கிணற்றில் இருந்து பைப் லைன் மூலம் தண்ணீர் வருவதாக சொல்வது பொய் என்றும், சர்வே எண் 483/6A, நிலத்தில் உள்ள ஆழ்துளை கிணற்றில் இருந்து தான் தண்ணீர் வருகிறது என்றால், சரியல்ல. சர்வே எண் 258-ல் உள்ளதாக சொல்லும் கிணற்றின் மின்இணைப்பு எண் என்னவென்றால், 118 மற்றும் 58 ஆகும். இரண்டு மின்இணைப்புகளும் யார் பெயரில் உள்ளது என்றால், என் பெயரில் தான் உள்ளது. ஒரே கிணற்றில் இரண்டு மின்இணைப்புகள் உள்ளதாக சொல்கிறேனா என்றால், ஆமாம். நான் சொல்வது பொய் என்றும் ஒரே கிணற்றுக்கு இரண்டு மின்இணைப்புகள் ஒரே நபர் பெயரில் வழங்குவதில்லை என்றால், சரியல்ல, பாய்ச்சல் அதிகமாக உள்ளதால், இரண்டு மின்இணைப்புகள் வாங்கியுள்ளேன். அது போல் மேற்படி இரண்டு மின்இணைப்புகளும் ஒரே கிணற்றிற்கு என்

பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்க தயாராக உள்ளேனா என்றால், உள்ளேன். 320 மீட்டர் நிலத்திற்கு பைப் லைன் மூலம் தண்ணீர் வருவதாக சொல்வது பொய் என்றும், 1200 மீட்டர் நிலத்திற்கு பைப் லைன் செல்கிறது என்றால், சரியல்ல.

27. 1, 2 பிரதிவாதிகளின் கூடுதல் பதிலுரையில் சொல்லியுள்ள 483/6A–ல் உள்ள சொத்து யார் பெயரில் உள்ளது என தெரிந்துக் கொண்டேனா என்றால், அதற்கு அவசியம் இல்லை. அந்த சொத்து 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது எனக்கு தெரியும் என்றும், அதை ஒப்புக் கொண்டால் வழக்கு எனக்கு பாதகமாகிவிடும் என்று பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல.

28. எனது தகப்பனார் எப்போது காலமானார் என்றால், வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சுமார் 65 வருடங்களுக்கு முன்பு காலமாகிவிட்டார். எனது தகப்பனாருக்கு யார், யார் வாரிசுகள் என்றால், நான், எனது தங்கை மணியம்மாள், எனது அம்மா சின்ன குழந்தையம்மாள் ஆகியோர் வாரிசுகள் ஆவோம். எனது வழக்குரை மற்றும் வாக்குமூலத்தில் சொல்லியுள்ள குடும்ப ஏற்பாடு எப்போது நடந்தது என்றால், 1982–ம் ஆண்டு நடந்தது. அப்போது யார், யார், உடனிருந்து என்றால், நான், எனது அம்மா மற்றும் தங்கை மட்டும் தான் இருந்தோம். ஊர் பெரியவர்கள் அல்லது குடும்ப பெரியவர்கள் யாரும் இருந்தார்களா என்றால், இல்லை. நான் சொல்வது போன்ற குடும்ப ஏற்பாடு எதுவும் நடக்கவில்லை என்றும், அந்த குடும்ப ஏற்பாட்டில் மொத்த சொத்தும் எனக்கே வாய்மூலமாக கொடுத்ததாக சொல்வது பொய் என்றால், சரியல்ல.

29. பிரச்சனைகுரிய சொத்திற்கு கந்தாயம் செலுத்தியுள்ளேனா என்றால், செலுத்தியுள்ளேன். அந்த கந்தாய ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். கந்தாய ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல.

30. எனக்கு தமிழ் எழுத, படிக்க தெரியுமா என்றால், ஓரளவு தெரியும். 2019–ம் வருடம் தான் 20 செண்ட் சொத்துக்கு என் பெயரில் பட்டா தவறுதலாக வழங்கியதாக தெரிய வந்தது என தாவாவிலும், எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். 1–ம் பிரதிவாதி, 2–ம் பிரதிவாதி பெயருக்கு எந்த தேதியில் ஆவணம் எழுதி வைத்தார் என்றால், 2019–ம் ஆண்டே எழுதி வைத்தார், தேதி, மாதம் நினைவில் இல்லை. அந்த ஆவணம் பதிவு செய்த போது நான் உடன் சென்றேனா என்றால், இல்லை. சாட்சியாக கையெழுத்தாவது செய்தேனா என்றால், இல்லை. எனவே, அந்த பத்திரம் எழுதிய போது தான் என் பெயரில் தவறாக பட்டா வழங்கிய விவரம் தெரிய வந்தது என பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

31. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்காக வேண்டியே 2–ம் பிரதிவாதி பெயரில் வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிய 15 நாட்கள் கழித்து 1, 2 பிரதிவாதிகள் என்னுடைய அனுபவத்தை தடை செய்ய முயற்சிக்கிறார்கள் என பொய்யாக சொல்லி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

32. 1986–ம் ஆண்டு 1, 2 பிரதிவாதிகளின் தந்தை கிரையம் பெற்ற 28–1/2 செண்ட் சொத்தானது அவரது காலத்திற்கு பிறகு 1, 2 பிரதிவாதிகளின் குடும்பத்தில் வாய்மூலமாக பாகம் பிரித்துக் கொண்ட போது அந்த சொத்து 1–ம் பிரதிவாதியின் பாகமாக ஒதுக்கப்பட்டு பின்னிட்டு அவர் அச்சொத்தை 2–ம் பிரதவாதிக்கு வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் எழுதி வைத்துள்ளார் என்றால், சரியல்ல.

33. வா.சா.ஆ.2 ஆவணத்தில் கிரையம் மூலமாக பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்வதற்கு பதிலாக, பிதுராஜ்ஜிதமாக பாத்தியப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளதை நான் சாதகமாக எடுத்துக் கொள்ள முடியாது என்றால், சரியல்ல. எந்த காலத்திலும் நான் 35 செண்ட் சொத்தை அனுபவித்தது இல்லை

என்றும், 20 செண்ட் சொத்தை தான் அனுபவித்து வருகிறேன் என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் தான் பிரச்சனைக்குறிய சொத்து மற்றும் அதற்கு வடக்கில் உள்ள சொத்து என மொத்தம் 28-1/2 செண்ட் சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரியல்ல.

34. தாவா சொத்து விவரத்தில் 35 செண்ட் சொத்திற்கு வடக்கில் முருகேச ரெட்டி சொத்து இருப்பதாக தவறாக சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல. நான் பொய்யான சங்கதிகளை சொல்லி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் தாவாவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

**ENDING TIME: 01.25. P.M.**

YUVARAJ Digitally signed by YUVARAJ Date: 2025.08.19 16:10:34 +0530